From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2014

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father/Husband Name | : ராமச்சந்திரன் |
| Age | : | Calling | : |
| Date | : 24.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் மேலவளவு ராசினாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தற்காலிக டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை என்னுடன் கல்லூரியில் படித்தால் எனக்கு தெரியும். நிகழ்நிலை புகார்தாரர் கரிகாலனை எனக்கு தெரியும், மற்றும பட்டியல் சாட்சிகள் 2 முதல் 10 வரை தெரியும். கடந்த 2005ம் வருடம் மேலூர் அரசு கலை கல்லூரியில் இளங்கலை கணிதம் 1ம் ஆண்டு படித்து வந்தேன். நான் கல்லூரியில் விளையாட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு நடந்தது, அப்போது மதியம் 1 மணிக்கு கல்லூரியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இருந்தேன். எனக்கு தெரிந்த சாட்சி சுந்தரபாண்டி மற்றும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அதை நாங்கள் விலக்கிவிட்டோம், மறுநாள் நான் கல்லூரிக்கு வந்தபோது கல்லூரி வளாகத்திற்கு வெளியே கூட்டமாக இருந்தது. நான் உள்ளே சென்று பார்த்தபோது கல்லூரிக்கு கால வரையறையற்ற விடுப்பு விடுபட்டிருந்தது. நானும், எனது நண்பர்களும் சேர்ந்து மைதானத்தின் வழியாக எங்கள் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தோம். அப்போது எங்களை நோக்கி எதிரி சிலம்பரசன், ராம்பிரசாத் மற்றும் அவருடன் 7, 8 நபர்கள் வரும்பொழுது கத்திக்கொண்டே வந்தார்கள். எங்களை பார்த்து அவர்கள் யாருடா எங்கள் பசங்களை அடித்தார்கள் என்று கேட்டுக்கொண்டிருந்போதே எங்களை அடித்தார்கள். என்னை

சிலம்பரசனும், பிரசாத்தும் கட்டையால் அடித்தார்கள், எதிரி தவமணி என்பவர் கத்தியால் எனது வலது கையில கீறிவிட்டார். (இந்த நீதிமன்றத்தில் சாட்சி தனது வலது கையில் உள்ள தலும்மை காட்டி சாட்சியம் அளித்தார்). நான் உடனே கத்தி கூச்சலிட்டவுடன் அங்கிருந்த மற்ற மாணவர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் வந்ததும் எதிரிகள் என்னையும், மற்றவர்களையும் பார்த்து இனிமேல் எங்க பசங்களிடம் பிரச்சனை வைத்துக்கொள்ளாதிர்கள் என்றும், பிரச்சனை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றார்கள். எனக்கு கட்டையால் அடித்ததில் உள்காயமும், கத்தியால் கீறியதால் வெளிக்காயமும் ஏற்பட்டது, எனக்கு ஏற்பட்ட காயத்தால் மயங்கியவுடன் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார்கள், அங்கு நான் சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னை வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் சொல்லியுள்ளேன் என்றால் தெரிந்ததைதான் சொன்னேன். என் மீது எதிரிகள் தரப்பில் கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு கல்லூரிக்கு சென்றேன் என்றால் காலை 09.15 லிருந்து 09.30 இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிற்கு முந்தைய தினம் எதிரிகள் தரப்பில் ஒருவரை நாங்கள் தாக்கி அதனால் எதிரிகள் தரப்பில் கல்லூரியில் உள்ளிருப்பு போராட்டம் செய்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் சென்றபோது கூட்டமாக மட்டும் கல்லூரியின் வாசலில் இருந்தார்கள்.

2) நான் வீட்டிற்கு செல்வதற்கு எந்த வழியாக சென்றேன் என்றால் கல்லூரியின் பின்பக்கம் விளையாட்டு மைதானம் வழியாக சென்றேன். எங்கள்

கல்லூரி மற்றும் விளையாட்டு மைதானத்தை சேர்த்து 50, 60 ஏக்கர் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. நான் கல்லூரிக்கு சென்றவுடனே கல்லூரி கால வரையற்ற விடுமுறை என்று தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் எந்த திசை பக்கமாக எனது வீட்டிற்கு சென்றேன் என்றால் தென்மேற்கு திசையாக சென்றேன். எங்கள் கல்லூரியின் நுழைவாயில் திருச்சி – மதுரை மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் கத்திக்கொண்டு எவ்வளவு தூரத்திலிருந்து எங்களிடம் வந்தார்கள் என்றால் 100, 150 மீட்டர் இருக்கும். நீதிமன்றத்திலிருந்து மெயின் ரோட்டை தாண்டி அங்கு உள்ள நியுமாஸ் ஹோட்டல் தூரம் இருக்குமா என்றால் இருக்கும். அவ்வளவு தூரத்திலிருந்து வரும்போது அவர்களுக்கிடையே பேசிய விவரம் நமக்கு தெரியாது என்றால் அவர்கள் எதற்காக அவர்கள் வந்தார்கள் என்று தெரியாது, எங்களை தாக்க வருகிறார்கள் என்று அப்போது எங்களுக்கு தெரியாது. நாங்கள் மொத்தம் 10 நபர்கள் சென்றோம் என்றால் 5 நபர்கள் சென்றோம்.

3) என்னிடம் போலீசார் விசாரித்தபோது யார் எங்களை தாக்கினார்கள், எந்த ஆயுதத்தை வைத்து தாக்கினார்கள் என்று நான் சொன்னேனா என்றால் என்னை தாக்கிய விவரம் குறித்து சொன்னேன். என்னை எந்த ஆயுதத்தை வைத்து தாக்கினார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன், அந்த ஆயுதத்தை போலீசார் கைப்பற்றி என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு நானாக சென்றேனா அல்லது யாராவது அழைத்து வந்தார்களா என்றால் ஆம்புலன்ஸ் மூலம் வந்தேன். எவ்வளவு நேரம் கழித்து எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் அன்றையதினமே மயக்கம் தெளிந்தது. என்னை மருத்துவமனையில் சேர்த்த விவரம் மற்றவர்கள் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4) அதன்பின்னர் எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் சொன்னதுபோல் எதுவும் நடைபெறவில்லை, எனது நண்பர்கள் முந்தைய தினமே எதிரிகள்

சமூகத்தை சார்ந்தவர்களை தாக்கியதனால் எங்கள் தரப்பினர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, போலீசார் எங்களை தேடி வந்ததால் நடக்காத சங்கதிகளை கூறியும், தானாக காயத்தை உற்பத்தி செய்து கொண்டும், எங்கள் மீது போடப்பட்ட வழக்கு சமாதானம் செய்ய வேண்டும் என்பதற்காக எதிரிகள் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் தரப்பினர்கள் எங்களோடு சமாதானம் ஆகி அதனால் மாண்புமிகு மாவட்ட 3 வது அமர்வு நீதிமன்றத்தில் எங்கள் மீது உள்ள வழக்கில் விடுதலை செய்யப்பட்டோம் என்றால் சரியல்ல, முறையாக வழக்கை நடத்தியே விடுதலை செய்யப்பட்டோம். மேலும், எங்களை தாக்கியபோது எங்கள் மீது வழக்கு உள்ள விவரமே எனக்கு தெரியாது. நானாக எனக்கு காயங்களை ஏற்படுத்திக்கொண்டதால்தான் இந்த வழக்கில் போலீசாரால் எந்த ஆயுதத்தையும் கைப்பற்ற முடியவில்லை என்றால் சரியல்ல.